# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

**முறையீட்டு மனு எண்: 153/மா/2019**
**ஆணை நாள்: 28 –2–2020**

திரு. N.G. தெய்வகடாட்சம்,
வடபழனி, சென்னை 600 026. – முறையீட்டு மனுதாரர்

1. திரு. I. பெரியசாமி,
   செயற் பொறியாளர்,
   மண்டலம் - 10,
   பெருநகர சென்னை மாநகராட்சி.

2. திரு. மு. கண்ணன்,
   இளநிலை பொறியாளர்,
   மண்டலம் - 10,
   பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர் மனுதாரர்கள்

சென்னை -26, வடபழனி, எண். 1, கருமாரியம்மன் கோவில் தெரு, பிளாசா மேனர், பிளாட் எண். C-44, என்ற முகவரியில் வசிக்கும் திரு. N.G. தெய்வகடாட்சம் என்பவரது 30.9.2019 நாளிட்ட முறையீட்டு மனு 01.10.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு முறையீட்டு மனு எண். 153/மா/2019 என் எண்ணிடப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் பெறப்பட்டு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

முறையீட்டு மனுதாரர் தனது 30.9.2019 நாளிட்ட முறையீட்டு மனுவில் அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தில் சிலர் அனுமதியின்றியும், விதி மீறியும் கட்டடங்கள் கட்டியுள்ளார்கள் என்றும், இதனை அறிந்த அருள்மிகு ஸ்ரீபரத்வஜீஸ்வரர் கோயில் செயல் அலுவலர் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு W.P.No. 16116/2017 மற்றும் W.M.P.No. 17405/2017 ன்படி சென்னை புலியூர் கிராமம், பிளாக் எண். 03, சர்வே எண். 16 ல் கட்டப்பட்டுள்ள கட்டிடம் உள்ள இடம் வடபழனி முருகன் கோவிலுக்கு சொந்தமானது என்றும், அவ்விடத்தில் அனுமதியின்றி கட்டப்பட்டுவரும்

கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த வேண்டுமென்றும் வழக்கு தொடர்ந்தார் என்றும், இதனிடையில் 16.8.2017 அன்று மாநகராட்சி செயற்பொறியாளர் திரு. I. பெரியசாமி மூடி முத்திரையிடுவதற்கும், கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்குமான அறிவிப்பாணையினை கட்டிட உரிமையாளருக்கு வழங்கினார் என்றும், அதன்பிறகு நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றும், இவ்வழக்கின் மீது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 15.11.2017 அன்று வழங்கிய தீர்ப்புரையின்படி நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி 10வது மண்டல செயற்பொறியாளர் திரு. I. பெரியசாமி மற்றும் இளநிலை பொறியாளர் திரு. மு. கண்ணன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

2) இம்முறைமன்ற நடுவத்தின் 15.10.2019 நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனு மீதான அறிக்கையினை சமர்ப்பிக்க, பெருநகர சென்னை மாநகராட்சி 10வது மண்டல அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி மண்டல அலுவலரது 12.11.2019 நாளிட்ட அறிக்கையில், சென்னை -24, புலியூர் கிராமம், சர்வே எண். 16 ல் அனுமதியின்றியும் விதிமீறியும் கட்டப்பட்டு வரும் கட்டிட மீது நடவடிக்கை மேற்கொண்டு கட்டிட உரிமையளருக்கு 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டத்தின் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், அக்கட்டிடம் தொடர்பாக அருள்மிகு ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் திருக்கோவில் நிர்வாகம் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு W.P.No.16116/2017 ன்படி வழக்கு தொடரப்பட்டது என்றும், அவ்வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் 15.11.2017 அன்று வழங்கிய தீர்ப்புரையில் கீழ்க்கண்டவாறு உத்திரவிடப்பட்டுள்ளது.

3) " In the light of the said stand taken by the 4th respondent coupled with the fact that Locking, Sealing and Demolition Notice dated 16.8.2017 has also been issued to the respondents 7 and 8 and challenging the same, they have also filed a Special Revision / Appeal u/s. 80-A of the Tamil Nadu Town and Country Planning Act, 1971, before the Secretary to Government, Housing and Urban Development Department, Secretariat, Chennai -9, no further orders are necessary in this writ petition and depending upon the result of the appeal /special revision, the writ petitioner as well as the respondents 7 and 8 are at liberty to work out their remedy in accordance with law..."

மேலும் தனது அறிக்கையில் கட்டிட உரிமையாளர் அரசு செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அவர்களிடம் செய்யப்பட்டுள்ள மேல் முறையீடு இன்னும் நிலுவையில் இருந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

4) இம்முறைமன்ற நடுவத்தின் 15.10.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரர் 04.12.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் சென்னை கோடம்பாக்கம், புலியூர் கிராமம், சர்வே எண். 16 என்ற முகவரியில் கட்டியுள்ள விதிமீறிய கட்டிடத்தை அகற்றிட நீதிமன்ற ஆணை பிறப்பித்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்று வரை சென்னை மாநகராட்சி மண்டலம் 10 செயற்பொறியாளர் திரு. I. பெரியசாமி மற்றும் 130-வது வட்டம் இளநிலை பொறியாளர் திரு. கண்ணன் ஆகிய இருவரும் கட்டிடத்தை இடித்து அகற்றுவதற்குரிய பணிகளை செய்யாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டியவர்களுடன் சேர்ந்து செயல்படுகிறார்கள் என்றும், வருவாய் துறை பதிவேட்டில் கோயில் நிலம் என்று தான் உள்ளது என்றும், கட்டிடம் கட்டியவர்கள் தங்களுக்கு நிலம் சொந்தம் இல்லாத நிலையில் போலியாக ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை உருவாக்கி அதன் மூலம் ஒரு பதிவை உருவாக்கி வில்லங்க சான்றிதழ் பெற்றுள்ளார்கள் என்றும், ஆனால் அவர்களுக்கு எந்த பட்டாவோ வருவாய் துறையினர் மூலமாக வழங்கப்படவில்லை என்றும், இந்த இடம் கோயிலுக்கு சொந்தமானது என்றும், போலி பட்டாவை வைத்து கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கிய செயற்பொறியாளர் திரு. பெரியசாமி மற்றும் இளநிலை பொறியாளர் திரு. கண்ணன் ஆகிய இருவரும் போலி பட்டா தயார் செய்தவர்களுக்கு சாதமாக வருவாய் துறை ஆவணங்களை சரிபார்க்காமல் அல்லது சரிபார்த்து அதை மறைத்து திட்ட அனுமதியும் கட்டிடம் கட்ட அனுமதியும் வழங்கி உள்ளனர் என்றும், கட்டிடம் கட்டியுள்ளவர்கள் அரசு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளார்ச்சி துறைக்கு மேல்முறையீடு செய்துள்ள மனுவை எதிர்த்து திரு. பெரியசாமி அந்த இடம் கோயில் இடம் என்றும், போலி பட்டா தயாரித்து கோவில் இடத்தை கிரையம் செய்துள்ளார் என்றும், அரசு செயலருக்கு அவர் எந்த கடிதமும் எழுதவில்லை என்றும், எனவே திரு. I. பெரியசாமி மற்றும் திரு. கண்ணனும் கோவிலுக்கு சொந்தமான நிலத்தை போலியாக ஆவணம் தயார் செய்து போலி பட்டா தயாரித்தவர்களுக்கு சாதகமாக சட்டப்படி பெறவேண்டிய பட்டா போன்ற ஆவணங்களை பெறாமல் வருவாய் துறை ஆவணங்களை பரிசீலிக்காமல் போலியாக குடும்பத்திற்குள் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி அவர்கள் குடும்பத்திக்குள்ளேயே உருவாக்கி கொண்ட பத்திரத்தையும் பத்திர பதிவு வில்லங்க சான்றினையும் அடிப்படையாக வைத்து வழங்கிய திட்ட அனுமதி, கட்டிட அனுமதி ரத்து செய்யாமலும் போலி பட்டா அடிப்படையில் விதிமீறி கட்டிய கட்டிடத்தை இடிக்காமலும் இருக்கிறார் என்றும், தெரிவித்து போலி பட்டா நகலினையும் சமர்ப்பித்தார். கோயிலுக்கு சொந்தமான நிலத்தை போலி பட்டா மூலம் தங்களது நிலம் போன்று உருவாக்கி, தாங்களே பதிவு செய்து கொண்ட பத்திரங்கள் மூலம் வில்லங்கத்தை உருவாக்கி அந்த வில்லங்க சான்று

அடிப்படையில் திரு. ராமசந்தர் என்பவருக்கு சாதகமாக செயற்பொறியாளர் திரு. பெரியசாமி லாபம் அடையும் நோக்கத்தோடு செயல்பட்டு உள்ளார் என்றும், திரு. கண்ணன் இளநிலை பொறியாளர் அதற்கு துணையாக இருந்து இருக்கிறார் என்றும், தெரிவித்து எனவே இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

5) இம்முறைமன்ற நடுவத்தின் 15.10.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி 04.12.2019 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி, 10வது மண்டல செயற்பொறியாளர் திரு. வி. பெரியசாமி மற்றும் திரு. மு. கண்ணன் இளநிலை பொறியாளர் ஆகியோர் ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் தற்போது கட்டிட பணிகள் ஏதும் நடைபெறவில்லை என்றும், கட்டிட உரிமையாளர் திரு. ராம்சந்தர் சென்னை பெருநகர மாநகராட்சியின் கட்டிடம் கட்ட வரைபட அனுமதி மற்றும் திட்ட அனுமதி பெற்ற அளவுகள் அவர் கட்டிடம் கட்டியுள்ள அளவுகள் ஆகியவைகள் குறித்து களத்தில் அளவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் பதிவாகி உள்ளது என்றும், அதன் நகலும் இன்று முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த கட்டிடம் பணிகள் முழுவதும் நின்று விட்டது என்றும், திரு. தெய்வகடாட்சம் காட்டிய புகைப்பட நகல்கள் நுழை வாயிலாகும் என்றும், பொருள் சேமிப்பு குடோனாகவோ அல்லது மற்றப்படி எந்த பயன்பாட்டிலும் இல்லை என தெரிவித்தார்கள்.

6) இம்முறைமன்ற நடுவத்தின் அழைப்பாணையின்படி 31.12.2019 அன்று புலியூர் கிராமம் நிர்வாக அலுவலர் திரு. அ. ராஜ்குமார் ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் சென்னை பழைய வருவாய் மாவட்ட பகுதிகளில் "அ" பதிவேடு முதல் அனைத்து பதிவேடுகள் மற்றும் கணக்குகளும் நேரடியாக அந்த அந்த வட்டாட்சியர் பொறுப்பில் உள்ளது என்றும், அவருக்கு உதவியாக நில அளவையாளர்கள் உள்ளனர் என்றும், கிராம நிர்வாக அலுவலரை பொறுத்தமட்டில் நகரபுற நில வரி வசூல் செய்யும் பணி மட்டுமே ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

7) இம்முறைமன்ற நடுவத்தின் அழைப்பாணையின்படி 31.12.2019 அன்று கோடம்பாக்கம் சார்பதிவாளர் (மாவட்டப் பதிவாளர் நிலை) விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் புலியூர் கிராமம், கோடம்பாக்கம் துணை பதிவு மாவட்டத்தை சார்ந்தது என்றும், அதில் புலியூர் கிராமம், சர்வே எண்.16/10, 16/11 ஆகியவைகள் குறித்து ஆவண எண். 2192/2010 மற்றும் ஆவண எண். 2535/2011 ஆகிய ஆவணங்கள் கோடம்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றும், ஆவண எண். 3563 / 2005 மூலம் திருமதி. அம்சவள்ளி என்பவர் திரு. காளியப்பன், திரு. வைரமுத்து, திரு. நடராஜன், மற்றும் திருமதி. காளியம்மாள் ஆகிய

நால்வருக்கும் செட்டில்மெண்ட் பத்திரமாக செய்துள்ளார் என்றும், அதற்கு முன்பு திருமதி. அம்சவள்ளி என்பவர் திருமதி. கஜிதாபீ வகையறாவிடமிருந்து ஆவண எண். 2679 / 1989-ன்படி கிரையம் பெற்றார் என்றும், மேலும் ஆவண எண். 2192 / 2010 மூலம் திரு. ராம்சந்தர் ஏற்கனவே செட்டில்மெண்ட் ஆவணம் முலம் உரிமை பெற்ற திரு. காளியப்பன் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றும், மீண்டும் திரு. ராம்சந்தர் என்பவர் ஆவண எண். 2535/ 2011 மூலம் திருமதி. அபர்ணலட்சுமி என்பவருக்கு கிரையம் செய்துள்ளார் என்றும், அதற்கு பிறகு பதிவுகள் ஏதும் இல்லை என்றும், இதில் 4560 சதுரடி தரைதளமும், முதல் தளம் 800 சதுரடியும் கட்டப்பட்டது என்றும், மனையினுடைய பரப்பளவு 4560 சதுரடி ஆகும் என்றும், இத்துடன் வில்லங்க சான்றிதழ் மற்றும் ஆவண எண். 2679/1989, 3563/2005, 2192/2010, 2535/2011 ஆகியவை குறித்த வில்லங்க சான்றிதழ் 1.1.1975 முதல் 23.12.2019 வரை சமர்ப்பித்துள்ளதாகவும், வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் சம்மந்தப்பட்ட சொத்துகள் அனைத்தும் புலியூர் கிராமம் புல எண். 16/10 மற்றும் 16/11 சம்மந்தப்பட்டது ஆகும் என்றும், ஆவண எண். 2679/1989 மற்றும் 3563/2005 நகலை உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு 6.1.2020க்குள் சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார்.

8) இம்முறைமன்ற நடுவத்தின் 13.1.2020 நாளிட்ட அழைப்பாணையின்படி எழும்பூர் வட்டம், புலியூர் கிராமம், சம்பந்தப்பட்ட நிலஅளவையர் 5.2.2020 அன்று விசாரணைக்கு ஆஜராகி புலியூர் கிராமம், பிளாக் எண்.3, T.S. No.16/10 மற்றும் 16/11 இரண்டும் நிர்வாக அதிகாரி ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் கோயில் பெயரில் உள்ளது என்றும், தற்பொழுதும் பட்டா மேற்படி கோயில் பெயரில் உள்ளது என்றும், ஏற்கனவே 1953 ஆம் ஆண்டு வட்ட நிரந்தர நில அளவை பதிவேட்டிலும் ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் கோயில் பெயரிலேயே இருந்தது என்றும், இடையில் ஒரு மாற்றம் ஏற்பட்டு மீண்டும் அவை ரத்து செய்யப்பட்டு மீண்டும் ஸ்ரீபரத்வஜீஸ்வரர் கோயில் பெயரிலேயே பதிவேற்றம் பதிவேட்டில் உள்ளது என்றும் தெரிவித்து ரத்து செய்யப்பட்ட அதன் ஒளி நகல்கள் மற்றும் இது குறித்த 23.1.2020 நாளிட்ட வட்டாட்சியர் அறிக்கையும் சமர்ப்பித்தார். இந்நிலம் 1983க்கு முன்பு திருவாளீஸ்வரர் கோயில் பெயரிலும், 1983 பின்பு அம்சவள்ளி அம்மாள், திரு. என். எஸ். ராமசந்தர், என். அபர்ண லட்சுமி ஆகியோரின் பெயரில், பட்ட வழங்கப்பட்டு பின்பு பட்டா ரத்து செய்யப்பட்டு மீண்டும் ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் கோயில் பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும், மொத்த 22 கிரவுண்ட் நிலம் பல்வேறு பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டு, 2004 ஆம் ஆண்டு அவைகள் ரத்து செய்யப்பட்டு ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் கோயில் பெயருக்கே மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும், தற்பொழுது அவை அனைத்தும் பட்டா மற்றும் அனைத்து ஆவணங்களிலும் ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் கோயில் பெயரிலேயே உள்ளது என்றும் தெரிவித்தார்.

9) முறையீட்டு மனுதாரர், தனது முறையீட்டு மனுவில் மேற்படி சர்வே எண்.16/10, 16/11 ல் உள்ள நிலத்தினை போலியாக பட்டா பெற்றதாக குறிப்பிட்ட திரு. என்.எஸ்.ராம்சந்தர் மற்றும் திருமதி. அபர்ணலட்சுமி ஆகியோருக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 23.12.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி 3.1.2020 அன்று விசாரணைக்கு ஆஜராகி தங்களது விளக்கங்களை தெரிவிக்க ஆணையிடப்பட்டது. ஆனால் அவர்கள் யாரும் விசாரணைக்கு ஆஜராகவில்லை. எழுத்துபூர்வ விளக்கமும் அளிக்கவில்லை.

10) இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பொது தகவல் அலுவலர் மற்றும் தலைமையிட துணை வட்டாட்சியர் எழும்பூர் அவர்களிடமிருந்து பெற்ற 18.11.2019 நாளிட்ட கடிதத்தில் எழும்பூர் வட்டம், புலியூர் கிராமம், பகுதி-03, புல எண்.16/10 மற்றும் 16/11 ஆகியவைகள் அலுவலக கணினி வழி பதிவேட்டின்படி நிர்வாக அதிகாரி, ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் கோயில், புலியூர் என பதியப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் புல எண். 16/10 மற்றும் 16/11-ல் உள்ள இடம் (1) திரு. என்.எஸ்.ராம்சந்தர் (2) திருமதி. அபர்ணலட்சுமி ஆகியோரின் பெயரில் டவுன் சர்வே ரிஜிஸ்டரில் பதிவு செய்யப்பட்டுள்ள சான்றிதழ் எழும்பூர் நுங்கம்பாக்கம் வட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. எனவே, இம்முறைமன்ற நடுவ 13.12.2019 நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி புலியூர் கிராமம் புல எண்.16/10 மற்றும் 16/11 உள்ள நிலங்கள் தொடர்பான வருவாய் ஆவணங்கள் மற்றும் அருள்மிகு ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் திருக்கோயில் பெயரிலுள்ள அனைத்து நிலங்கள் குறித்தும், திரு. என்.எஸ்.ராம்சந்தர் மற்றும் திருமதி. அபர்ணலட்சுமி ஆகியோரின் பெயரில் வழங்கப்பட்டுள்ள பட்டா குறித்த உண்மைத்தன்மை குறித்தும் விரிவான அறிக்கை அனுப்ப எழும்பூர் வட்டாட்சியரிடம் கோரப்பட்டது. அதன்படி, எழும்பூர் வட்டாட்சியர் தனது 23.1.2020 நாளிட்ட அறிக்கையில், சென்னை கோடம்பாக்கம், புலியூர் கிராமம், சர்வே எண். 16 சம்மந்தமான ஆவணங்களை பரிசீலினை செய்ததில், மேற்படி புலமானது கணினி நிரந்தர நிலப்பதிவேட்டில் கீழ்க்கண்டவாறு பதிவாகி உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

"

| ஸ்தலம் (அ) தெருவின் பெயர் | புல எண். | உட்பிரிவு எண். | பழைய புல / உட்பிரிவு எண். | கதவு எண். | சர்க்கார்/ ரயத்து வாரி | நிலத்தின் வகைப்பாடு | உரிமையாளர் பெயர் | நிலத்தின் பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| பெருமாள் கோவில் குளம் வடக்கு தெரு | 16 | 10 | 16 pt | 5D pt | ரயத்து வாரி | மனை | நிர்வாக அதிகாரி ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் கோயில் புலியூர் | கட்டிடம் |
| பெருமாள் கோவில் குளம் வடக்கு தெரு | 16 | 11 | 16 pt | 5D pt | ரயத்து வாரி | மனை | நிர்வாக அதிகாரி ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் கோயில் புலியூர் | காலி மனை |

மேலும், சென்னை மாவட்டம், எழும்பூர் வட்டம், புலியூர் கிராமம், பிளாக் எண். 003, நகர புல எண். 16/10, 16/11 கைப்பிரதி நிரந்தர நிலப்பதிவேட்டில் கீழ்க்கண்டவாறு பதிவாகி உள்ளது

| | | |
|---|---|---|
| மாவட்டம் | : | சென்னை |
| வட்டம் | : | எழும்பூர் |
| பிளாக் | : | 3 |
| நகர புல எண். | : | 16 |
| வகை | : | இ.பு. |
| விஸ்தீரணம் | : | 222கி.1650 ச.அடி. |
| உரிமையாளர் | : | திருவாலீஸ்வரர் இனாம் |

"

எனவே, சென்னை மாவட்டம், எழும்பூர் வட்டம், புலியூர் கிராமம், பிளாக் எண். 003, நகர புல எண். 16/10, 16/11 உள்ள சொத்து திருக்கோயிலுக்கு சொந்தமான இடம் என்பது வருவாய்துறை ஆவணங்கள் மூலம் தெரிய வருகிறது என தெரிவித்துள்ளார்.

11) இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, விசாரணையின்போது அளித்த வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி 10வது மண்டல அலுவலர் மற்றும் எழும்பூர் வட்டாட்சியர் அறிக்கைகள், 10வது மண்டல செயற்பொறியாளர் திரு.பெரியசாமி மற்றும் இளநிலை பொறியாளர் திரு. கண்ணன், கோடம்பாக்கம் சார்பதிவாளர், கிராம நிர்வாக அலுவலர், புலியூர், புலியூர் கிராமம் நில அளவையர் ஆகியோரின் வாக்குமூலங்கள், நில அளவையரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கிற்குட் பட்ட சர்வே எண். 16/10, 16/11 உள்ள சொத்து வட்டாட்சியர் அலுவலகத்தில் பாரமரிக்கப்பட்டு வரும் ஆவணங்களில் அருள்மிகு ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான நிலம் என்று பதிவுகள் இருந்து வருகிறது என்பது வட்டாட்சியரின் அறிக்கை மற்றும் ஆவணங்கள் மற்றும் விசாரணையின் போது அளிக்கப்பட்டுள்ள வாக்குமூலங்கள் மூலம் உறுதியாகிறது. மேலும், புலியூர் கிராம நிலஅளவையர் விசாரணையின் போது அளித்த வாக்குமூலம் மற்றும் வருவாய் ஆவணங்கள் மூலம் மேற்படி சொத்து 1983 ஆம் ஆண்டுக்கு முன்பு அருள்மிகு திருவாலீஸ்வரர் கோயில் பெயரிலும், 1983-க்கு பின்பு இச்சொத்து அம்சவள்ளி அம்மாள், திரு. N.S. ராம்சந்தர் மற்றும் திருமதி என்.அபர்ணலட்சுமி பெயரிலும், மாற்றம் செய்யப்பட்டு திரும்ப TR. 458, TR 459/12-13 தேதி 5.6.2012ன்படி பட்டா ரத்து செய்யப்பட்டு, மீண்டும் ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் திருக்கோயில் பெயரில் மாற்றம் செய்யப்பட்டு தற்போது பட்டா மற்றும் அனைத்து ஆவணங்களும் ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் கோயில் பெயரிலேயே உள்ளது என்பது உறுதியாகிறது. அருள்மிகு ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் திருகோயிலுக்கு சொந்தமான அசையா சொத்துக்களின் மனை வாடகையினை நியாயவாடகை குழுவினால் நியாயவாடகை நிற்ணயிக்கப்பட்டு வாடகையினை செலுத்த திருமதி. அம்சவள்ளி

என்பவருக்கு கடிதம் அனுப்பப்பட்டும் நேரில் பலமுறை வலியுறுத்தியும் மனை வாடகையினை செலுத்தாததால் அருள்மிகு ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் திருகோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர் அவர்களின் 18.8.2009 நாளிட்ட அறிவிப்பின்படி திருமதி. அம்சவள்ளி என்பவரது குடியிருப்பு அடிமனை வாடகை உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது. திருமதி. அம்சவள்ளி குடியிருப்பு அடிமனை வாடகை உரிமம் ரத்து செய்யப்பட்டது தொடர்பாக அருள்மிகு ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் திருகோயில் இணை ஆணையர்/செயல் அலுவலரிடம் மேல் முறையீடு ஏதும் செய்யப்படவில்லை. இந்நேர்வில் மேற்படி நிலம் திருமதி. அம்சவள்ளி என்பவருக்கு சொந்தமானது இல்லை என்பதும் அருள்மிகு ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் திருகோயிலுக்கு சொந்தமான நிலத்தில் அடிமனை வாடகைக்கு குடியிருந்து வந்துள்ளார் என்பதும் மேற்படி நிலம் அருள்மிகு ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் திருகோயிலுக்கே சொந்தமானது என்பதும் உறுதியாகிறது.

12) ஒரு கோயில் சொத்து எவ்வாறு தனி நபர்களால் திட்டமிட்டு அபகரிக்கப்படுகின்றது அதற்கு அரசுத் துறைகள் எவ்வாறு துணை போகின்றன என்பதற்கு இந்த வழக்கு ஒரு சிறந்த உதாரணமாய் அமைகின்றது. ஒரு பானை சோற்றிக்கு ஒரு சோறு பதம் என்பது போல் நாடு முழுவதும் இதேப் போன்ற பல கோவில் சொத்துக்கள் அரசு அதிகாரிகளின் துணையோடு தனி நபர்களால் களவாடப்பட்டுள்ளது என்பது முழு விசாரனை செய்தால் வெளியாகும். வழக்கில் உள்ள சொத்தைப் பொறுத்த அளவில் முதலாவதாக ஆவண எண்.2679/89 மூலம் முதல் மோசடி ஆரம்பமாகின்றது. அந்த ஆவணத்தில் இஸ்மாயில் மனைவி மற்றும் நால்வரால் திருமதி அம்ச வள்ளிக்கு ரூ.9000-வுக்கு ஒரு கிரயப் பத்திரம் எழுதப்படுகிறது. அந்தப் பத்திரத்தில் 1981 முதல் பரத்வஜீஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான காலி மனையை வாடகைக்கு பெற்றதாகவும் கோயில் பெயருக்கே அடிமனை உள்ளதாகவும் மேற்கூரை ரூ.9000/- 'மதிப்புள்ளதாகவும் மேற்கூரையை ஆவணத்தின் மூலம் கிரயம் செய்வதாக உள்ளது. ஆவண எண்.2679/1989 மூலம் காலிமனை கோயிலுக்கு சொந்தம் எனக் குறிப்பிட்டு மேற்கூரை மட்டும் கிரயம் பெற்ற திருமதி. அம்சவள்ளி ஆவண எண்.3563/2005 மூலம் தனது குமாரர்கள் மற்றும் குமாரத்திகளுக்கு தனக்கு சொந்தமில்லாத, கோவிலுக்கு சொந்தமான நிலத்தை தான செடில்மெண்ட் செய்துள்ளார். இதில் ஆவண எண்.2679/1989 என்ற முன்பதிவு குறிப்பிடப்பட்டுள்ளது. முன்பதிவைப் பார்த்தால் கோவில் நிலம் என்பது தெளிவாகத் தெரியும். இந்த நிலையில் சார் பதிவாளர் எவ்வாறு கோவில் நிலத்தை அறநிலையத் துறை அனுமதியின்றி பதிவு செய்தார் என்பது பதிவுத் துறையால் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டியுள்ளது. இந்து சமய அறநிலையத்துறையினர் இதை எப்படி அனுமதித்தார்கள் என்பதை இந்த சமய அறநிலையைத்துறை பரிசீலிக்க வேண்டிய நிலையும் உள்ளது. மொத்தத்தில் கோவிலுக்குச் சொந்தமான நிலத்தை பதிவு செய்ததில் பதிவுத்துறை சார்

பதிவாளரும் கோவில் நிலங்களை பாதுகாக்கத் தவறியதில் சம்பந்தப்பட்ட நிர்வாக அலுவலரும் கடமை தவறியுள்ளது குறித்து சம்பந்தப்பட்ட துறைகள் பொது நலன் கருதி பரிசீலிக்க பரிந்துரை செய்யப்படுகிறது.

13) இந்நேர்வில் இவ்வழக்கிற்கு உட்பட்ட சர்வே எண்.16/10, 16/11, உள்ள நிலம் அருள்மிகு ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் திருகோயிலுக்கு சொந்தமானது என்பது ஆவண எண்.2679/1989யில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும் மேற்படி நிலம் அருள்மிகு ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் திருகோயிலுக்கு சொந்தமானது என்று வருவாய் துறை ஆவணத்திலும் தெளிவான பதிவுகள் உள்ள நிலையிலும் மேலும், சென்னை கோடம்பாக்கம் புளியூர் கிராம நில அளவையரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் மற்றும் எழும்பூர் வட்டாச்சியரின் அறிக்கையின் மூலமும் உறுதி ஆகிறது. இந்நிலையில் எழும்பூர் வட்டாச்சியரால் இடைப்பட்ட காலத்தில் அருள்மிகு ஸ்ரீ பரத்வஜீஸ்வரர் திருகோயிலுக்கு சொந்தமான நிலைத்திற்கு தனி நபர்களுக்கு பட்டா எவ்வாறு வழங்கப்பட்டது என்பதை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரைக்கப்படுகிறது.

14) 2012ல் பட்டா ரத்து செய்யப்பட்டு திருக்கோவில் பெயரில் பட்டா மாற்றப்பட்டுள்ளது. காளியப்பன் வகையறாவிடமிருந்து 2010ல் ஆவண எண்.2192/2010) திரு. ராம்சந்தரும் 2011ல் திரு. ராம்சந்தர் இடமிருந்து திருமதி. அபர்ணலட்சுமியும் (ஆவண எண். 2535/2011) கிரயம் பெறுகிறார்கள். ஆனால் பெருநகர சென்னை மாநகராட்சியின் 10வது மண்டலத்தில் 2016ஆம் ஆண்டு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (PPA/WDCN 10/05263/2016 மற்றும் VA/WDCN 10/5624/2016) இது தவறு. அருள்மிகு பரத்வஜீஸ்வரர் நிர்வாகத்தால் வழக்கு தொடுக்கப்பட்ட போது மாநகராட்சியால் நிலம் உரிமையல்லாதவருக்கு கட்டிடம் கட்ட கட்டிட அனுமதி அளித்த தவறை மறைத்து 16.2.2017ல் கட்டிடத்தை சீல் வைக்கவும் இடித்து அப்புறப்படுத்தவும் அறிவிப்பு அனுப்பி வழக்கை திசை திருப்பி மாண்பமை உயர் நீதிமன்றத்தை மாநகராட்சி அலுவலர்கள் ஏமாற்றியுள்ளனர். ஆனால் அதற்குப் பின்பு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மீண்டும் மனுதாரர் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தை அணுகியவுடன் மீண்டும் 1.11.2019ல் கட்டிடத்தை சீல் வைக்கவும் இடித்து அப்புறப்படுத்தவும் ஒரு அறிவிப்பு அனுப்பி உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை ஏமாற்றவும், திசை திருப்பவும் ஒரு அறிவிப்பு அனுப்பியதோடு கட்டிடம் கட்டியவர்கள் அரசுக்கு மேல் முறையீடு செய்துள்ளனர் என்ற தகவலையும் குறிப்பிட்டனர். மேல் முறையீடு முடியும் வரை காத்திருக்க வேண்டும் என்றால் ஏன் 1.11.2019ல் 10வது மண்டல அலுவலர்களால் மீண்டும் கட்டிடத்தை சீல் வைப்பது மற்றும் இடித்து அப்புறப்படுத்துவது குறித்து அறிவிப்பு அனுப்ப வேண்டும்? 10வது மண்டல அலுவலர்களால் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை ஏமாற்றவும் வழக்கை திசை திருப்பவும் செய்த

செயலாகும். கட்டிடம் கட்டியவர்கள் அரசுக்கு மாநகராட்சி அறிவிப்புக்கு எதிராக மேல் முறையீடு செய்து தடையாணை கோரியுள்ளனர். அரசால் தடையாணை ஏதும் வழங்கப்படவில்லை. இந்நிலையில் அரசு ஆணை (நிலை) எண். 111 வீட்டு வசதி மற்றும் நகரபுற வளர்ச்சி துறை நாள்:22.6.2017ல் கீழ்கண்டவாறு உள்ளது என்பதையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

"Filling an application for exemption under these regulations will not in any way prevent the competent authority from taking action under any of the provisions of the Act, unless otherwise ordered so by the competent authority."

15) மாநகராட்சியால் அறிவிப்பு அனுப்பிய கட்டிடம் இடித்தல், சீல் வைத்தல், அப்புறப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மாண்பமை உயர்நீதிமன்ற ஆணையின்படி செயல்படவேண்டும் என்பதால் அதுகுறித்து உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தால் எவ்வித ஆணையும் இடப்படவில்லை. அரசிடம் உள்ள மேல் முறையீட்டில் மாநகராட்சி அலுவலர்கள் நேர்மையான முறையில் செயல்பட்டு ஆணை பெற்று மாண்பமை உயர்நீதிமன்ற ஆணையின்படி செயல்பட வேண்டும்.

16) மேலே விவரிக்கப்பட்ட அனைத்தையும் கவனமாக பரிசீலிக்கையில் 2012-ஆம் ஆண்டு முதல் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து வருவாய் துறை ஆவணங்களின்படி தொடர்ந்து கோயில் பெயரிலேயே பட்டாக்களில் பதிவுகள் இருந்தும் பதிவுகளை சரிபார்க்காமல் ஆவணங்களை பரிசீலிக்காமல் அல்லது உண்மையை மறைத்து தனி நபருக்கு உதவும் வகையில் விதிகளை மீறி இந்து அறநிலையத்திற்கு சொந்தமான நிலத்தில் கட்டிடம் கட்டிட தனி நபர்கட்கு அனுமதி வழங்கியதில் தவறாக விதிகட்கு புறம்பாக செயல்பட்ட கடமை தவறிய பெருநகர மாநகராட்சி 10வது மண்டல சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுத்திட சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 23.3.20 9/12

பெறுநர்:

1. திரு. N.G. தெய்வகடாட்சம் - மனுதாரர்,
   C-44,பிளாசமேனர் பிளாட்,
   எண்.1, கருமாரி அம்மன் கோயில் தெரு,
   வடபழனி, சென்னை 600 026.

23/3/2020

2. திரு. ஐ. பெரியசாமி – எதிர் மனுதாரர்,
செயற் பொறியளார்,
மண்டலம் - 10, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.117, என். என். கே. சாலை,
கோடம்பாக்கம், சென்னை – 600 024.

3. திரு. மு. கண்ணன் - எதிர் மனுதாரர்,
இளநிலை பொறியாளர்,
மண்டலம் - 10, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.117, என். என். கே. சாலை,
கோடம்பாக்கம், சென்னை – 600 024.

4. மண்டல அலுவலர்,
மண்டலம் - 10, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.117, என். என். கே. சாலை,
கோடம்பாக்கம், சென்னை – 600 024.

நகல்

1. ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
(பத்தி 16 குறித்து நடவடிக்கை எடுத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்)

2. பத்திரப் பதிவு துறை தலைவர்,
சாந்தோம் நெடுஞ்சாலை, முல்லிமாநகர், மந்தவெளிபாக்கம்,
இராஜா அண்ணாமலைபுரம் சென்னை – 600 028.
(பத்தி 12 குறித்து பரிசீலித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது)

3. அரசு முதன்மை செயலர்/ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
ஆயிரம் விளக்கு (மேற்கு), நுங்கம்பாக்கம்,
சென்னை 600 034.
(பத்தி 12 குறித்து பரிசீலித்து நடவடிக்கை எடுத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்)

4. மாவட்ட ஆட்சியர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சிங்கார வேலர் மாளிகை,
எண்.100, இராஜாஜி சாலை,
சென்னை – 600 001.
(பத்தி 13 குறித்து பரிசீலித்து நடவடிக்கை எடுத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்)

5. முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
மாநகராட்சி பிரிவு
இ.கோ./ உதிரிகள்